10.03.2026.

CC.53/2023

அ.சா.1 மூர்த்தி (புகார்தாரர்), த/பெ.கோவிந்தசாமி.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் சிகிச்சைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்ந்தபோது மருத்துவரிடம் என்ன காரணத்திற்காக சிகிச்சையில் சேர்வதாக கூறினேனா என்றால் கூறினேன். மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தபோது எதிரிகள் அடித்ததாக கூறியிருந்தால் மருத்துவர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து அதன்பேரில் போலிசார் வந்து வாக்குமூலம் வாங்கியிருப்பார்கள் நானாக கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டதால்தான் மருத்துவரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. 6ம் எதிரி பெருந்தேவி என்பவர் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் போட தெரியும். 1ம் எதிரி குடும்பத்தின்மீது இதுவரை எத்தனை புகார் கொடுத்திருப்பேன் என்றால் அதற்கு கணக்கே இல்லை. 6ம் எதிரி பெருந்தேவி என் வீட்டிற்கு எதிர்புறம் உள்ளார் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் விரோதமா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்பவம் குறித்து எந்த தேதியில் எங்கு வைத்து புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை தேசூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் ஒரு நபர் எழுதினார் அவர் பெயர் ஞாபகம் இல்லை.

சாட்சி மாசிலாமணி ஆசிரியர் எனக்கு உறவினரா என்றால் எனது சித்தப்பா மகன் ஆவார். எனது குடும்ப பிரச்சனையை பற்றி அவருக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மாசிலாமணி ஆசிரியரின் நிலம் எங்குள்ளது என்றால் ஆச்சமங்கலம் கிராமத்திலும், பாஞ்சரையிலும் உள்ளது. பாஞ்சரையில் உள்ள நிலத்தின் பட்டா எண், சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. விஸ்தீரனம் தெரியுமா என்றால் சுமார் 3 1/2 ஏக்கர் இருக்கும். மேற்படி மாசிலாமணி தற்போது எப்போது நிலம் வாங்கினார் என்றால் 3, 4 மாதங்கள் இருக்கும். என்னுடைய வீட்டிற்கும் மாசிலாமணியின் நிலத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எதிரியின் நிலத்தின் வழியாகதான் எனது நிலத்திற்கு செல்லவேண்டும் என்றால் ஆமாம். எதிரியின் நிலத்தின் வழியாக என்னை செல்லக்கூடாது என்று கூறியதால்தான் எனக்கும் எதிரிகளுக்கும் விரோதம் என்றால் சரிதான். அந்த முன் விரோதத்தினால்தான் நான் எதிரிகள்மீது தொடர்ச்சியாக பல பொய்யான புகார்களை தொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி புகாரில் உண்மையில்லாததால்தான் தேசூர் போலிசார் எதிரிகள்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

எதிரிகளின் நிலத்தின் வழியாக எனது நிலத்திற்கு செல்ல பாதை விட்டுவிட்டால் எந்தவித பிரச்சனையும் எங்களுக்குள் இல்லையென்றால் சரிதான் என் இடத்தை எனக்கு விடவேண்டும். நான் எதிரிகள்மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் எதிரிகள் அடித்ததாகவோ, கொலை மிரட்டில் விடுத்ததாகவோ, அசிங்கமாக பேசியதாகவோ குறிப்பிடாததால்தான் போலிசார் சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சனை என்பதால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை.

1ம் எதிரியின் அண்ணன் பெயர் தெரியுமா என்றால் ரங்கநாதன் ஆகும். அவர் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. மேற்படி 1ம் எதிரியின் அண்ணன் ரங்கநாதன் 21.04.2023ம் தேதி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் அதனால் அன்றைய தினம் எதிரிகள் யாரும் ஊரில் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

// உண்மை நகல் //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.
Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.